Kalanjiyam International Journal of Tamil Studies
களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.56
https://ngmtamil.in/

# புறநானூறு கூறும் பண்டைய தமிழரின் உயரிய சிந்தனைகள்

**முனைவர் மா.ஜெ.சசிக்குமார்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கோபி கலை அறிவியல் கல்லூரி,
கொபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம்.
**அலைபேசி: 8124636070**

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டைய தமிழரின் வாழ்க்கை வரலாறுகளை எடுத்துக்காட்டும் ஆதாரங்கள் நிறைந்ததாக இருப்பது நமது சங்க இலக்கியம் ஆகும். சங்க இலக்கியச் செய்திகள் வெறும் புராணக் கதைகளின் புனைவுகள் அல்ல. மக்களின் நடைமுறை வாழ்வு சார்ந்த குறிக்கோள்களை உள்ளடக்கிய இலக்கியம் ஆகும். சங்கப் பனுவல்கள் அன்றைய மக்களின் வாழ்வு நெறிமுறைகளை நமக்கு நேரடியாக எடுத்துக்காட்டுகின்றன. எதிர்காலச் சமுதாயம் எவ்வாறு அமைய வேண்டும் என்ற முறைமையைச் சுட்டிக் காட்டுகின்றது. நம்முடைய தமிழ் இனத்தின் பாரம்பரியச் சொத்தான பண்பாட்டுக் கூறுகள், உயர் சிந்தனைகள் முதலானவைகள் சங்க நூல்களில் பொதிந்து காணப்படுகின்றன. அவற்றினை எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**திறவுச்சொற்கள்**

பனுவல்கள், சாகாவரம், நுன்மாண் நுழைபுலம், செவ்வியல், ஏடறிதல், தன்னீகம், சான்றோனாக்குதல், அருஞ்சமம், விளையாட்டாயம்,

**முன்னுரை**

இலக்கியம் என்பது காலத்தால் அழியாமல் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டுமானால், அது மீண்டும் மீண்டும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இலக்கியங்கள் சாகாவரம் பெற்றவை என்று சொன்னால் அது மிகையாகாது. அத்தகைய சாகாவரம் பெற்ற இலக்கியம் நமது சங்க இலக்கிய தொகுப்பாகும். இதில் பாடுபொருளும் வடிவமும் உயிரும் உடலும் போன்ற இணைந்து நிற்கும் தன்மையைக் காண முடியும்.

**சங்க இலக்கியம் – மரபும் சிறப்பும்**

“மரபு” எனும் சொல்லிற்கு “குணம், பழமை, முறைமை, வம்சம், இலக்கணம், இயல்பு, பெருமை, மேம்பாடு”[1] என்பன போன்ற பல பொருள்களைத் தமிழ் மொழி அகராதி தருகிறது. அப்படிப்பட்ட மரப்களை எடுத்துக் கூறுவதில் சங்க இலக்கியம் நமக்கு வேராக இருக்கிறது என்றால் அது மிகையன்று. உணர்ச்சிக்கு ஏற்ற பாட்டு வடிவம் அமைவது சங்க இலக்கியத்தின் தனி சிறப்பாகும். இயற்கை சார்ந்த பின்னணியோடு திணைக்கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்துள்ளதும் சங்க இலக்கியத்தின் மற்றொரு தனி சிறப்பு ஆகும் உலக செவ்வியல் இலக்கியங்களுக்கு நிகரான செவ்வியல் தன்மையோடு நமது சங்க இலக்கியம் விளங்குகிறது என்பது நமது தனிச்சிறப்பு ஆகும்.

“உண்மையான உணர்ச்சியின் காரணமாகத்தான் பாடல்கள் தோன்றுகின்றன என்று நான் கருதுகின்றேன்”[2] என்று ‘ஈழத்து நாட்டர் பாடல்கள்’ எனும் நூலுக்கு அணிந்துரை வழங்குகையில் நா.வானமாமலை கூறுவது இங்கே எஇனைவுகூறத் தக்கது.

**சங்க இலக்கியம் பிரிவுகள்**

கவிதை அமைப்பாலும் அடிகளின் எண்ணிக்கை முறையாலும் எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்று பிரித்திருப்பது போல உள்ளடக்க முறையாலும் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவைகள் முறையே,

1. அக பாடல்கள்
2. புற பாடல்கள்

என்பனவாகும்.

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுதியா
முற்படக் கிளந்த எழுதிணையும் என்ப" — (தொல். பொருள்.அகத்திணை. - 1)

"புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்,
வெட்சி முதலாப் பெருந்திணை இறுதியா
அப்பால் ஏழே அகத்திணைப் புறனே." — (தொல். பொருள். புறத்திணை. - 1)

என்று தொல்காப்பியர் கூறுவதன் மூலம், ‘அகம்’ என்பது அளவில் காதலில் தொடங்கி கற்பில் முடியும் இல்லற வாழ்வு நெறியைக் குறிப்பதாகும் என்பதும், ‘புறம்’ என்பது காதலைத் தவிர்த்த ஏனைய செய்திகள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு தொகுப்பாகும் என்பதும் அறியப்படுகின்றன. மேலும், புறத்தில் வீரமும் கொடையும் முதன்மையானதாகவும் முக்கியமானதாகவும் பேசப்பட்டுள்ளன.

கவிதை வடிவத்தை நோக்கும் போது ஆசிரியம், கலிப்பா, பரிபாட்டு, வஞ்சிப்பா ஆகியவற்றால் பாடப்பட்டுள்ளது. இவற்றோடு இசை வடிவமாகவும் சங்க இலக்கியம் திகழ்கிறது.

இன்னும் நுட்பமாக ஆராய்ந்தால் ஏடறிந்த ஆசிரியத்தில் நாடறிந்த இனக்குழு வாழ்க்கை தென்படுவதையும் நாம் உணரலாம்.

**உயரிய சிந்தனைகள்**

சங்க இலக்கியம் அக்காலத் தமிழர்களின் தனித்த அடையாளங்களான உயர் சிந்தனைகளைப் பேராசிரியர் இரா.கலைச்செல்வி படம் பிடித்துக் காட்டுகிறார். அவை,

- “உலக நோக்கம்
- அறம்பாடுதல்
- வாய்மை
- போற்றுதல்
- பொறுப்புணர்வு
- தன்நலமறுப்பு
- நன்றி உணர்வு
- மனித நேய உணர்வு
- உயிர் இறக்கப் பண்பு
- தன்னீகம்
- தன்னம்பிக்கை ஊட்டல்
- தன்மான உணர்வு
- கொடை வழங்குதல்”[3]

என்பனவாகும். எனவே, இவைபோன்ற இன்னும் பிற உயரிய சிந்தனைகளை சங்க தமிழர்கள் வரையறுத்துக் கொண்டு வாழ்ந்ததோடு, பிற்காலச் சமுதாயத்திற்கும் அவற்றை வலியுறுத்திச் சென்றுள்ளனர் என்பதை சங்க இலக்கியங்களை வாசிப்பதன் மூலம் நாம் அறிகிறோம்.

**உலக நோக்கம்**

நிறத்தால், குணத்தால், பண்பாட்டால், ஆடை அணிகலன்களால், சாதியால், மதத்தால் வேறுபட்டுக் கிடந்தாலும் ஒற்றுமை காண்பதே மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரின் கடமையாகும். ஒற்றுமையும் ஒருமைப்பாடும் இல்லாததால் சமூக அவலங்கள் பெருகிக்கொண்டே வருகின்றன என்பது கண்கூடாக நாம் பார்க்கின்ற உண்மையாகும். சமுதாய அவலங்கள் குறைந்து வேரற்றுப் போகும் வழியைக் காண சங்க இலக்கியத்தைப் புரட்டும்போது

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” - (புறநானூறு – 192)

என்ற புறநானூற்றுப் பாடல் அடி புலப்படுகின்றது. ஒற்றுமைக்கும் உலகளாவிய ஒருமைப்பாட்டுக்கும் இதைவிட எளிய வழி வேற எதுவும் இல்லை என்று சொல்ல வேண்டும். தமிழ் இலக்கியங்களின் படைப்பின் தொடக்கம் உலகளாவிய பார்வையுடன் தான் தொடங்குகிறது.

தமிழில் இன்றளவு இலக்கியங்கள் பொதுப் பார்வையுடன் படைக்கப்படுகின்றன என்பது மறுக்க இயலாத உண்மை ஆகும்

**அறநெறி நிற்றல்**

சங்கப் பாடல்கள் ஒவ்வொன்றும் அறத்தின் வழிப்பட்ட வாழ்க்கை நெறியை வலியுறுத்துகின்றன. சமுதாயத்தில் யாராக இருந்தாலும் அறத்தின் வழியிலே தான் செயல்பட வேண்டும்; அறத்தின் வழியில் தான் பொருள் ஈட்ட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுகின்றன. கோவூர் கிழார் என்ற புலவர் சோழன் நலன் கிள்ளியை குறித்துப் பாடுகையில்,

"சிறப்புடை மரபில் பொருளும் இன்பமும்
அறத்து வழிபடும் ……………………" - (புறநானூறு- 31)

என்று பாடுகிறார். இதன்மூலம், அறத்தின் இன்றியமையாமையையும் அறச் செயலே அனைத்திற்கும் முதன்மையாய் நிற்பதையும் உணரச் செய்துள்ளார் என்பதை உணர முடிகிறது. அரசனே ஆனாலும் அவனும் அறத்தின் வழி நிற்றல் வேண்டும் என்பதுதான் சங்கச் சான்றோரின் உயர்ந்த கொள்கையாகும்.

"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" - (புறநானூறு - 55)

என்ற புறநானூற்றுப் புலவர் ஒருவர் பாடி நிற்பதை நாம் உணர முடிகின்றது. சங்கத் தமிழர்கள் அகமாயினும் புறமாயினும் அறநெறி நின்றவர்கள். போரில் அற நெறியைக் கடைப்பிடித்தவர்கள் முதலில் தமிழர்களாகத்தான் இருக்க வேண்டும். அக வாழ்வில் அறத்தோடுநிற்றல் நிலை இதனையே வலியுறுத்துகின்றது.

**வாய்மை போற்றல்**

ஒருவனுடைய வாய்ச் சொற்களே அவன் எத்தககுடியில் பிறந்தவன், எத்தகைய பண்பினன் என்பதைக் காட்டிவிடும் என்பது வள்ளுவ பேராசானின் கருத்தாகும். நின்று நிலைக்காத அற்ப வாழ்வுக்காக இன்றைய சமுதாயத்தில் எத்தனையோ பொய்யும் வழுவும் புகுந்து விட்டன. ஆனால் சங்கத் தமிழன் எத்தகச் சூழலிலும் வாய்மையே தவறாது போற்றியவன். அந்த வாய்மை தான் உயர் சிந்தனையாக ஒழுக்க நெறியாக மலர்ந்து உள்ளது. அதனை,

"வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன் மெய் கூறுவல்" - (புறநானூறு – 139)

எனும் வரியின் மூலம் புறநானூறு காட்டுகிறது. மேலும்,

"நிலம் பெயரினும் நின் சொல் பெயரல்" - (புறநானூறு – 3)

எனும் வரியின் மூலம், ஒருவன் தான் சொன்ன சொல் மாறி விடுதல் கூடாது என்பதையும் எடுத்துக்கூறி எச்சரிக்கின்றது.

**தன்னிலை மறுப்பு**

தனக்காக வாழாமல் பிறர் நலன் கருதி வாழுகின்ற அன்பு உடையவர்களால் தான் இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பது இலக்கியங்கள் வெளிப்படுத்தும் முடிவாகும். பொதுநலம் மறைத்து சுயநலம் மேலோங்கும் இன்றைய சூழலில், பொதுநலம் பேணும் நோக்கில்

"தமக்கென முயலா நோண்தாள்

பிறர்க்கென முயலுநர் உண்மை யானே" - (புறநானூறு – 182)

என்று புறநானூறு குறிப்பிடுகின்றது. சங்கப் பாடல்கள் காட்டுகின்ற சமுதாயம் பொறுப்புணர்வுடன் செயல்பட்டிருந்ததை இதன் மூலம் நம்மால் உய்த்து உணர முடிகின்றது. ஒரு வீரத்தாயின் கூற்றாக அமைந்த பாடல் நல்லதொரு சமுதாய உருவாக்கத்திற்கு இன்றளவும் பயனுடையதாய் இருப்பதோடு அல்லாமல் எதிர்காலத்திற்கும் நல்ல சமுதாயக் கட்டமைப்பு உருவாகத் துணை புரிகின்றது.

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே

சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே

வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே

நன்நடை நல்கல் வேந்தர்க்குக் கடனே

ஒளிருவாள் அருஞ்சம முருக்கிக்

களிரெறிந்து பெயர்தல் காளைக்கு கடனே" - (புறநானூறு – 312)

இவ்வாறாக புறநானூறு நல்லதொரு அறிவார்ந்த வீரம் சார்ந்த சமுதாய உருவாக்கத்திற்கு உற்ற துணையாக நிற்கிறது.

**மனிதநேயம்**

மனிதர்கள் தங்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் அன்பு காட்டி வியந்து வாழ்வதே மனிதநேயம் ஆகும். இத்தகைய மனிதநேய உணர்வு சங்க காலத்து மக்களிடத்தும் புலவர்கள் இடத்தும் நிரம்பவே காணப்பட்டது. எதிரிகளாக இருந்தாலும் அவர்கள் இடத்திலும் மனிதநேய உணர்வை சங்ககாலச் சான்றோர்கள் செலுத்தி இருக்கின்றனர். சோழன் நலங்கிள்ளி முற்றுகையிட உள்ளிருந்த நெடுங்கிள்ளி வெளியே வராமலும் போர்செய்யாமலும் கோட்டைக் கதவினை அடைத்து விட்டதால் மக்களும் குழந்தைகளும் படும் பாட்டினைக் கோவூர்கிழார்,

"பால்இல் குழவி அலறவும் மகளிர்

பூஇல் வறுந்தலை முடிப்பவும் நீர்இல்

வினைபுனை நல்இல் இனைகூறக் கேட்பவும்

இன்னாது அம்ம" - (புறநானூறு – 44)

என்றுபாடித் தன்னுடைய மனிதநேய உணர்வை வெளிப்படுத்துகிறார். இங்கு மன்னன் இடித்துரைக்கப்பட்டதோடு அல்லாமல் மக்களின் துயரமும் எளிமையில் களையப்படுகிறது. மேலும், புலவர் தன்னுடைய அரசனோடு போரிட்டுத் தோற்ற பகையரசரின் நாட்டு மக்கள் அவலத்தை,

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

"தாயில் தூவாக் குழவிபோல

ஓவாது கூஉம்நின் உடற்றியோர் நாடே" - (புறநானூறு – 6)

என்றுபாடித் தன்னுடைய மனிதநேயத்தை வெளிப்படுத்தியுள்ள பாங்கையும் இதன்மூலம் நாம் பார்க்க முடிகின்றது.

**உயிர் இறக்கம்**

சங்கத் தமிழர்கள் மனிதநேயத்தையும் தாண்டி, ஆன்ம நேயத்தையும் உணர்ந்தவர்கள். பிரிதோர் உயிர் வாடுவதைப் பார்த்துக் கொண்டிருப்பது தமிழரின் பண்பாடுஅல்ல. மாறாகத் துன்பத்தைத் துடைக்க முயல்வதே தமிழரின் தலையாயக் கொள்கையாகும். அதனால்தான், வள்ளுவப் பேராசான்,

"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்

தன்நோய்போல் போற்றாக் கடை" - (திருக்குறள் எண் – 315)

என்று கூறுகிறார். இத்தகைய உயரிய சிந்தனையைத்தான் பண்டைய தமிழர்கள் கடைபிடித்து ஒழுகினர் என்பது இதன்மூலம் அறியப்படும் செய்தியாகும்.

"உடாஅ போரா ஆகுதல் அறிந்தும்

படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எம்கோ" - (புறநானூறு – 141)

என்று பேகன் மயிலுக்கு போர்வை கொடுத்த நிகழ்வைப் பரணர் புலப்படுத்துகின்றார். கானகத்தில் மயிலொன்று குளிரால் நடுங்கிக்கொண்டிப்பதைக் கண்டு, தன்னுடைய போர்வையினை அளித்தான் பேகன். மயில் ஒருபோதும் தன்னுடலில் போர்வை போர்த்தித் திரியாது என்பது அவனுக்கும் தெரியும். இருப்பினும் அதன் துயர்துடைக்க முற்பட்டதாகத்தான் நினைவில் வைக்க வேண்டும்.

"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி,

மறந்தனம் துறந்த காழ்முளை அகைய,

நெய்யோடு பால்பெய்து வளர்த்தது நும்மினும்

சிறந்தது; தங்கையென்று அன்னை கூறினள்….." - (நற்றிணை – 249)

எனும் நற்றிணைப் பாடலின் மூலம், ஓர் இளம்பெண் தன்னுடன் விளையாட்டாயத்தில் போட்ட விதை தானாக முளைத்து வளர்ந்தது. அப்புன்னையைத் தன்னுடைய தங்கை என்று எண்ணுகிற பாங்கு உயிர் இரக்கத்தின் உச்சநிலை என்பதை நாம் உணர வேண்டும்.

**தன்மான உணர்வு**

சங்கப்பாடல்கள் பல்வேறு கருத்தாக்கங்களை எடுத்துரைத்த போழ்தும், தமிழரின் தனித்த அடையாளமான தன்மான உணர்வினையும் பதிவுசெய்துள்ளன. அதியமான ஔவைக்குப் பரிசில் வழங்கக் காலம் தாழ்த்தியமை கண்டு ஔவை பாடிய,

"எத்திசை பெறினும் அத்திசைச் சோறே" - (புறநானூறு – 206)

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

எனும் பாடல் இன்றும் தமிழன் தன்மானத்துடன் வாழ்வதற்கு எடுத்துக்காட்டாய் இருக்கிறது. இதேபோன்று, பெருஞ்சித்திரனார் பாடிய,

எழுமதி நெஞ்சே! துணிபு முந்துறுத்தே" - (புறநானூறு – 237)

எனும் பாடலும் தன்மான உணர்வினை ஊட்டுவதாக அமைந்துள்ளது. இதன்மூலம் தன்மான உணர்வுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது என்பதை அறியமுடிகிறது.

**செய்நன்றி போற்றுதல்**

தமிழர்கள் செய்நன்றி மறவாமல் போற்றும் செயலில் தனிக்கவனம் செலுத்தியதைச் சங்கப்பனுவல்கள் கூறுகின்றன. சான்றாக,

"நிலம்புடை பெயர்வது ஆயினும் ஒருவன்
செய்திகொண் றோர்க்கு உய்இல் என
அறம் பாடிற்றே – ஆயிழை கணவ" – (புறநானூறு – 34)

எனும் புறப்பாடல் செய்நன்றி அறிதலை உறுதிபடக் கூறுவதைக் காணலாம். இதனாலேயே, நமது பண்டைத் தமிழர் செய்நன்றி போற்றுதலை உயரிய சிந்தனையாகக் கொண்டுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

**முடிவுரை**

தமிழர்கள் அறிந்திருக்கவேண்டிய பாரம்பரியச் சொத்து சங்க இலக்கியம் என்றால் அது மிகையன்று. அது பழமை வாய்ந்த பண்பாட்டுப் பெட்டகம். உலக அரங்கின் முதல் எதார்த்த நடப்பியல் சார்ந்த இலக்கியம். புராணக்கதை போன்று அல்லாமல், மக்களின் வாழ்க்கை முறையினின்று முகிழ்த்த இலக்கியம். எனவேதான், தன்னகத்தே எண்ணற்ற உயரிய சிந்தனைகளை அடக்கிவைத்துள்ளது. எனவே, செவ்வியல் இலக்கியத்தின் வாயிலாக நமது முன்னோர்களின் உயரிய சிந்தனைகளைக் கற்றிடவும், அவற்றை நடைமுறைப்படுத்தி அடுத்த தலைமுறைக்கு எடுத்துரைக்கவும் இன்றைய தலைமுறையினர் முன்வரவேண்டும் என்பதே இக்கட்டுரையின் முடிபாகும்.

**சான்றெண் விளக்கம்:**

1. கதிரைவேற்பிள்ளை நா. - தமிழ் மொழி அகராதி, ப.1139
2. வானமாமலை நா. - "முன்னுரை", ஈழத்து நாட்டார் பாடல்கள், இ.பாலசுந்தரம், ப.Vi.
3. கலைச்செல்வி இரா. - தமிழிலக்கிய வகைமைகளும் சமூகச் சூழலும், ப.282

**துணைநூற்பட்டியல்:**

[1.] **கதிரைவேற்பிள்ளை, நா.** *தமிழ் மொழி அகராதி*. சாரதா பதிப்பகம், **2005.**

[2.] **கலைச்செல்வி, இரா.** *தமிழிலக்கிய வகைமைகளும் சமூகச் சூழலும்*. தமிழ் ஆய்வாளர் மன்றம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், **2012.**

**[3.] திருஞானசம்பந்தம், ச.** *தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும்*. கதிர் பதிப்பகம், **2020.**

**[4.] பெரியண்ணன், கோ.** *திருக்குறள் பெரியண்ணன் உரை*. வனிதா பதிப்பகம், **2019.**

**[5.] புலியூர் கேசிகன்.** *புறநானூறு மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம், **2010.**

**[6.] வானமாமலை, நா.** *ஈழத்து நாட்டார் பாடல்கள்*. மக்கள் வெளியீடு, **1968.**